ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,176 — 1960 අගෝස්තු 5 වැනි සිකුරාදා — 5.8.1960

12,176 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III—காணிகள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள்— | |
| முன்னறிவித்தல்கள் .. .. .. | — |
| இறுதிக் கட்டளைகள் .. .. .. | — |
| அரசாங்க அதிபர்களினுற் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கிழக்கு மாகாணம் .. .. .. | — |
| வடமேற்கு மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| நிர்ணய உத்தியோகத்தர்களின் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. | — |
| கிழக்கு மாகாணம் .. .. .. | — |
| வடமேற்கு மாகாணம் .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள் .. | 419 |
| காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் .. | — |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித காணி அறிவித்தல்கள் .. .. | 424 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் .. | — |


## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, விவசாய மந்திரி எம். டீ. பண்டா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு,
1960 ம் ஞு ஜூலை மீ 18 ந உ.

எம். டீ. பண்டா,
காணி விவசாய மந்திரி.

மாகாண அல்லது டிஸ்திறிக் ஏசண்டுவின் இலக்கம் : Q. A. 574.
காணி விவசாய மந்திரி காரியாலயத்தின் இலக்கம் : J. 58/59 W. 894.

காணியின் விபரம்

கொழும்பு டிஸ்திறிக், அனுத்குறு கோறளை தெற்கு, கந்தானை கிராம விதானையின் பிரிவில், கந்தானை புகையிரத ஸ்தான ரோட்டில் இருக்கும் டம்புகஹாவத்தை என்னும் காணியில், வரிமதிப்பு இலக்கம் 91, 280, 281, கொண்ட மூன்று துண்டுகள். ஏறக்குறைய 0ஏ. 0றூ. 02·16 பேர்ச்சஸ் கொண்டன. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

(1) டம்புகஹாவத்தை—வரிமதிப்பு இல. 91—விசாலம் : 0ஏ. 0றூ. 02·4 பேர்ச்சஸ் :—
வடக்கு : கரோலின் அமரதுங்க உரிமை கேட்கும் டம்புகஹாவத்தை ;
கிழக்கு : எல். டீ. கரோலிஸ் உரிமை கேட்கும் டம்புகஹாவத்தை ;
தெற்கு : கந்தானை புகையிரத ஸ்தான ரோட் ;
மேற்கு : கொழும்பு—நீர்கொழும்பு ரோட்.

(2) டம்புகஹாவத்தை—வரிமதிப்பு இல. 280, 281—விசாலம் : 0ஏ. 0றூ. 0·8 பேர்ச்சஸ் :—
வடக்கு : கந்தானை புகையிரத ஸ்தான ரோட் ;
கிழக்கு : கந்தானை புகையிரத ஸ்தான ரோட்டுக்கு ஒதுக்கப்பட்ட காணியும் ;
தெற்கு : ஏ. எஸ். கே. கந்தையாபிள்ளை உரிமை கேட்கும் டம்புகஹாவத்தை என்னும் காணி ;
மேற்கு : கொழும்பு—நீர்கொழும்பு ரோட்.

(3) டம்புகஹாவத்தை—வரிமதிப்பு இல. 280, 281—விசாலம் : 0ஏ. 0றூ. 0·4 பேர்ச்சஸ் :—
வடக்கு : கந்தானை புகையிரத ஸ்தான ரோட் ;
கிழக்கு : கந்தானை புகையிரத ஸ்தான ரோட்டுக்கு ஒதுக்கப்பட்ட காணியும் ;
தெற்கு : ஏ. எஸ். கே. கந்தையாபிள்ளை உரிமை கேட்கும் டம்புகஹாவத்தை என்னும் காணி ;
மேற்கு : புகையிரத ஸ்தான ரோட்டும், ரோட்டுக்கு ஒதுக்கப்பட்ட காணியும்.

குறிப்பு இல. எல். ஏச்/டீ. 33.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

எவ். வீ. பீ. 78 இன் உதவிப் பட இல. 8 இல் துண்டு 504—மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் பஸ்டுன் கோரளே மேற்கில், வலல்லாவிற்றைப் பற்றுவையில், இத்தப்பானைக் கிராமத்திலமைந்துள்ளது.

| காணித் துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமை கோருபவர் பெயர் | விசாலம் ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| 504 | கித்துல்கஹஹேன .. | 30–35 வருட 237 றப்பர் மரங்களைக்கொண்ட றப்பர்த் தோட்டம் | டாக்டர் எல். ஏ. பறணவிதான, மாலம்பே தோட்டம், இத்தப்பானை | 2 0 04·7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஸ்ரீ செப்ரெம்பர் மாதம் 23 ந் தேதி மு. ப. 10.30 மணிக்கு மத்துகாமக் காரியாதிகாரியின் கந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஸ்ரீ செப்ரெம்பர் மாதம் 16 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1960 ம் ஸ்ரீ ஜூலை மீ 27 ந் உ.

கே. பி. திசாநாயக,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

---

குறிப்பு. இல. எல். ஏச்/டீ. 32.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்.**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பீ. பீ. ஏ. 4,501 இல் துண்டுகள் 1 ம், 2 ம், 3 ம், —மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பஸ்டுன் கோரளே மேற்கில், துடுகலைக் கிராமத்திலமைந்துள்ளன.

| காணித் துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமை கோருபவர் பெயர் | விசாலம் ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | கீசியன ஓவிற்ற .. | 6 மாத 14 றப்பர் மரங்களைக்கொண்ட றப்பர்த்தோட்டம் | முடிக்குரியது .. .. | 0 0 07·0 |
| 2 | ஷெ .. | 6 மாத 65 றப்பர் மரங்களைக்கொண்ட றப்பர்த்தோட்டம் | டொன் எட்மன் விஜேகுணரத்ன, துடுகல .. | 0 0 22·0 |
| 3 | ஷெ .. | 3 வருட 21 றப்பர் மரங்களையும், 30 வருட 3 தென்னை மரங்களையும் கொண்ட தோட்டம் | சமரவீர முதலிகே டேவிட், துடுகல .. | 0 0 32·1 |
| | | | மொத்தம் | 0 1 21·1 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஸ்ரீ செப்ரெம்பர் மாதம் 30 ந் தேதி மு. ப. 10.30 மணிக்கு மத்துகாமக் காரியாதிகாரி கந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஸ்ரீ செப்ரெம்பர் மாதம் 23 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1960 ம் ஸ்ரீ ஜூலை மீ 28 ந் உ.

கே. பி. திசாநாயக,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

---

LD/C/34.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம்உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம் உடபுலத்கம பிரிவு அதிகாரியின் பகுதி, அம்பகமுவ கோரளே, அக்கரவத்த அல்லது ஆட்னுஷ் அல்லது நோட்டன் பிரிஜ் கிராமத்திலுள்ள மிட்போட் தோட்டத்தில் (டோனி பூருக் பாகம்) 34·8 பேர்ச்சஸ் விசாலமுள்ள காணியின் பாகம். ஆரம்பப்பட இலக்கம் A. 2,684 ல் துண்டு 1, 2, என விபரிக்கப்பட்டுள்ளது. உரிமை கூறுபவர்கள் :—

மிட்போட் (சிலோன்) டி. எஸ்டேட்ஸ் லிமிட்டெட், தபால் பெட்டி 65, கொழும்பு ;

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ந் திகதி காலை 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் ஏதும் சாதனங்களையும் கேட்கப்படும் நஷ்ட ஈட்டுத் தொகை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

கண்டிக் கச்சேரி,
1960 ம் ஸ்ரீ ஜூலை மீ 26 ந் உ.

பி. எம். டி. விக்கிரமசிங்க,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

J/LG/2443/LB. 2279.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கீழ் தரப்பட்டகாணி இருக்கிறது, மாத்தறை திஸ்திறிக் வெல்லபொட பத்துவ நாலு கிறவட்ஸ் டி. ஆர். ஓ. காரியாதிகாரியின் பகுதி நாய்மன தெற்கு என்னும் கிராமத்தில். ஆரம்பப்பிளான் நொ. A 1768.

| துண்டு நொ. | காணியின் பெயர் | காணியின் விபரம் | உரிமையாளரின் பெயரும்விலாசமும் | விசாலம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | பண்டறவத்த அல்லது பெல்லன் கெடிய வத்த | தென்னங்காணியின் ஒருபாகம் கமச்செய்கை இல்லை | டி. எச். விஜேநாயக கிளன்ஸின், லேடி டி சொய்ஸா, டி றைவ், மொறடுவ ; ஈ. பி. ஏ. விஜேநாயக, ஓய்வுபெற்ற சுகாதாரபரிசோதகர், அம்பளான் கொட ; ஈ. டி. டப்லிவ்விஜேநாயக, விவசாயபோதகர், நீர்கொழும்பு ; திருமதி ஆதர் விஜேநாயக களுதற வடக்கு, களுதற மற்றும் திருமதி டெய்ஸி அபேஞரிய, வில்பிறட் ஹவுஸ், கொடுவே கொட மாத்தறை | 0 0 01·1 |
| 2 | ஷை .. | தென்னங்காணி 30 வருடம் சென்ற ஒரு தென்னைமரம் 20 வருடம் சென்ற ஒரு தென்னைமரம் | ஷை .. | 0 0 02·4 |
| | | | மொத்தம் .. | 0 0 03·5 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ந் தேதி மு.ப. 9.30 மணிக்கு மாத்தறைக்கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்தகாணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாத்தறைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 26 ந் உ.

எச். ஆர். ஆமித்,
மாத்தறை டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

குறிப்பு இல. LD. 3565 J. 55 L 318 (இக்குறிப்பு இதுசம்பந்தமான எல்லாக்கடிதங்களினும் குறிப்பிடப்படல் வேண்டும்).

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன் :— கல்லோயா அபிவிருத்திச்சபை வாய்க்கால் ஒன்றிற்காக.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பி.பி. நம் : ஏ–1335. கிராமம் :— காளிமடு

| காணியின் பெயர் | விபரம் | உரிமைபேசுவோர் | விஸ்தீரணம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|
| புச்சிகுடிகாடு .. | வாய்க்காலையும் றேட்டையும் கொண்ட பரந்த பண்படுத்தப்படாத பூமி | திரு. கணபதிப்பிள்ளை நல்லதம்பி–துறைநீலாவணை தெற்கு 2 ம் குறிச்சி | 1 0 15 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9 ந் தேதி மு.ப. 9 மணிக்கு நிந்தவூர்பற்று, காவாகுபற்று காரியாதிகாரிகந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்தகாணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஆண்டு ஆவணி மாதம் 22 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விசாரணைத் தினத்தன்று உரிமைபேசுவதற்கு சார்பாகவுள்ள எல்லாக் குறிப்புகளையும் எனக்குமுன் சமர்ப்பித்தல் வேண்டும். காணியின் விபரம் காட்டும் படம் காணிமடு கிராமாதிகாரியிடம் உண்டு. உரிமை பேசுவோர் எல்லோரும் இதைப் பார்வையிடல் வேண்டும். தேவையேற்படின் உரிமைபேசும் முன்னரும் விசாரணைக்குத் தோன்றுமுன்னரும் காணியை நேரில் சென்று பார்வையிடவும் வேண்டும்.

கச்சேரி, மட்டக்களப்பு,
1960 ம் ஆண்டு ஆடி மீ 22 ந் உ.

எஸ். கதிர்காமநாதன்,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

இல. 3/61/16—J 55 L 563.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணிகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

குருநாக்கல் மாவட்டம், வன்னி ஹத்பத்து, மல்பனுவ கிராமத்தில் அமைந்திருக்கும் கீழ் வரும் காணிகள் :—

2,895 ம் பிரதம படத்துக்கு 1ம் இணைப்படம்

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விசாலம் ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 244 | ஹலம்பகஹமுலவத்த .. | 5 வருஷமுள்ள 2 முருங்க மரங்களும் 2 வேம்பு மரங்களும் அடங்கிய தென்னந் தோட்டம் | ஆர். எம். கே. பண்டா, மல்பனுவ, மொன்னேகுளம | 0 0 02·0 |
| 245 | ஷை .. | 5 வருஷமுள்ள 4 முருங்க மரங்களும் வாய்க்காலின் பாகமும் அடங்கிய தோட்டம் | ஷை .. .. | 0 0 13·1 |
| 246 | கன்சூரியகஹமுல வத்த, ஹலம்பகஹமுலவத்த | தென்னந் தோட்டம் (பயிர் இல்லாதது) .. | ஷை .. .. | 0 0 1·2 |
| 247 | ஷை .. | 7 வருஷமுள்ள 1 இனுமிச்ச மரமும், 5 வருஷமுள்ள 2 முருங்க மரங்களும் வாய்க்காலின் பாகமும் அடங்கிய தென்னந் தோட்டம் | ஷை .. .. | 0 0 6·6 |
| 250 | மாரகஹாமுலவத்த, அம்பகஹாமுலவத்த | 40–50 வருஷமுள்ள 2 தென்ன மரங்களும் 6 வருஷமுள்ள 1 தென்ன மரமும், 3 வருஷமுள்ள 3 தென்னங் கன்றுகளும், 30 வருஷமுள்ள 1 மா மரமும், 2 வருஷமுள்ள 6 தொடங்மரங்களும், வாய்க்காலின் பாகமும் அடங்கிய தென்னந் தோட்டம் | ஏ. எம். ஏ. டிகிரால, ஏ. எம். ஏ. ரங்ஹாமி, ஏ. எம். எம். உக்கு அம்மா, ஆர். எம். கே. ஜி. பண்டா, ஆர். எம். ஏ. கிரிமெனிக்கா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 21·5 |
| 251 | அம்பகஹாமுலவத்த, கோன்கஹமுலவத்த, மாரகஹாமுலவத்த | 40 வருஷமுள்ள 1 தென்ன மரமும், 2 வருஷமுள்ள 8 தென்னங் கன்றுகளும், 30 வருஷமுள்ள 1 மாமரமும், 2 வருஷமுள்ள 1 பலாக் கன்றும், வாய்க்காலின் பாகமும் அடங்கிய தென்னந் தோட்டம் | ஏ. எம். ரி. ரங்ஹாமி, மல்பனுவ, மொன்னேகுலம் | 0 0 13·3 |
| 255 | கோன்கஹமுலவத்த .. | வாய்க்காலின் பாகமும் அடங்கிய தோட்டம் (பயிர் இல்லாதது) | எச். எம். டபிள்யு. டிகிரிபண்டா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 14·8 |
| 257 | தங்கஹாமுலவத்த .. | வாய்க்காலின் பாகமும் அடங்கிய சேனை .. | ஏ. எம். வீ. அப்புஹாமி, ஏ. எம். வீ. ரன்மெனிக்கா, ஏ. எம். வீ. கிரிமெனிக்கா, ஏ. எம். ஆர். கவ்வம்மா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 14·1 |
| 258 | திவுல்கஹாமுலவத்த .. | ஷை .. .. .. | ஏ. எம். பி. அப்புஹாமி, ஏ. எம். பி. ரன்மெனிக்கா, ஏ. எம். குணரத்ஹாமி, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 9·4 |
| 259 | எஹடுகஹாமுலவத்த .. | ஷை .. .. .. | ஏ. எம். பி. முதியான்ச, ஏ. எம். ஏ. புஞ்சிரால, ஏ. பி. பி. ஹேரத்பண்டா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 6·8 |
| 260 | திவுல்கஹாமுலவத்த .. | ஷை .. .. | ஏ. எம். என். பண்டா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 28·5 |
| 261 | ஷை .. | 20 வருஷமுள்ள 1 தென்ன மரமும் வாய்க்காலின் பாகமும் அடங்கிய தென்னந் தோட்டம் | ஏ. எம். எச். ரங்ஹாமி, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 18·2 |
| 265 | கோன்கஹவத்த .. | வாய்க்காலின் பாகமும் அடங்கிய சேனை .. | எச். எம். பி. மெனிக்ஹாமி, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 7·5 |
| 266 | ஷை .. | சேனை .. .. .. | ஷை .. .. | 0 0 0·8 |
| 270 | சியம்பலகஹாஹேன .. | வாய்க்காலின் பாகமும் அடங்கிய சேனை .. | ஏ. எம். டபிள்யு. ஹேரத்ஹாமி, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 20·4 |
| 271 | ஷை .. | ஷை .. .. .. | ஏ. எம். ஆர். கவ் அம்மா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 17·5 |
| 272 | கோன்கஹாஹேன .. | ஷை .. .. .. | ஏ. எம். வி. ரன்மெனிகா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 19·5 |
| 273 | ஷை .. | ஷை .. .. .. | ஆர். எம். கே. பண்டா, ஏ. எம். கே. கனுபண்டா, மல்பனுவ, ரி. எம். ஏ. சிட்டம்மா, ஹலம்பே, மொன்னேகுலம | 0 0 28·8 |
| 274 | ஷை .. | ஷை .. .. .. | ஏ. எம். கே. ரன்பண்டா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 22·6 |
| 275 | ஷை .. | ஷை .. .. .. | ஏ. எம். ஏ. புன்சிரால, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 15·8 |
| 276 | ஷை .. | ஷை .. .. | ஏ. எம். பி. முதியான்ச, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 9·5 |
| 276½ | ஷை .. | சேனை .. .. .. | ஏ. எம். பி. முதியான்ச, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 4·3 |
| 277 | ஷை .. | சேனை .. .. | ஏ. எம். பி. ரன்மெனிக்கா, மல்பனுவ, மொன்னேகுலம | 0 0 0·2 |
| 278 | ஷை .. | வாய்க்காலின் பாகமும் அடங்கிய சேனை .. | ஷை .. .. | 0 0 7·7 |
| 279 | ஷை .. | ஷை .. .. .. | ஏ. எம். ரி. அப்புஹாமி, திஉள்ளேவ, நிகவெரடிய | 0 0 3·3 |
| 282 | திவுல்கஹாஹேன .. | ஷை .. .. .. | ஆர். எம். எம். அப்புஹாமி, ஆர். எம். ஹேரத் பண்டா, ஆர். எம். எம். ரன்பண்டா, ஆர். எம். எம். ரகிரிபண்டா, பஹலமாவதகம | 0 0 4·6 |
| 283 | ஷை .. | சேனை .. .. .. | ஷை .. .. | 0 0 0·8 |

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமைக்காரர் | விசாலம் ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 284 | திவுல்கஹாஹேன் .. | வாய்க்காலின் பாகமும் அடங்கிய சேனை .. | ஏ. ஆர். எச். எம். கிரிமுதியான்சு, ஆனமடுவ | 0 0 11·8 |
| 285 | ஷை .. | ஷை .. .. | ஏ. எச். எம். ரிகிரிபண்டா, ஆனமடுவ .. | 0 0 11·9 |
| 286 | ஷை .. | ஷை .. .. .. | ஏ. எச். எம். ஆர். டிங்கிரி அம்மா, ஏ. எச். எம். கே. ஜினதாச, ஏ. எச். எம். கே. மெக்கம்மா, வடிகமன்காவ, ஏ. எச். எம். கே. முது மெனிகா, பெலிவெவ, ஏ. எச். எம். எஸ். அபேசிங்க குமாரிஹாமி, ஏ. எச். எம். ஜயதிஸ்ஸ பண்டார, ஏ. எச். எம். நன்தாவதி அபேசிங்ஹ குமாரி ஹாமி, குருநாக்கல் | 0 0 19·5 |

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ந் திகதி காலை 10.30 மணிக்கு ஹல்பே அரசாங்க பாடசாலையில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணிகளை எடுத்தற்காக நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குருநாக்கல் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 27 ந் உ.

எம். எல். ஜே. விக்ரமரத்ன,
குருநாக்கல் டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

---

இலக்கம் LM 5,763

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

பட இல. P.P.A. 993. இடம்—மின்னெரிபிற்றிய கிராமம், பணுவல் கோறளை மேற்கு, அத்துனுகம் பணுவல் கோறளைகள், கேகாலை டிஸ்திறிக், சப்பரகமுவ மாகாணம்

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமையாளர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தெல்கடவலேஹேன .. | 3 றப்பர், 1 தென்னை, 1 பலா, 2 தோடை, 36 பாக்கு, 1 கொஹொம்ப், 2 கசு மரங்களையும், அஸ்பெஸ்ரஸ் கூரையுடைய வீட்டின் பகுதியும் | மின்நெரிபிற்றிய பறக்கடுவ வாசிகளான பி. எச். கிரி மெனிக்கே, பி. எச். பபி, பி. எச். மன்சி, பி. எச். லமது, பி. எச். பபி, பி. எச். டொற்றியா, பி. எச். ஜெமா, பி. எச். எலியா, எம். பி. கிரிகத்தன, எம். பி. பலகிரா, எம். பி. பெரிசேத்துவா | 0 0 17·2 |
| 2 | புசல்ல பிரிவின் கல்புசெல்ல பகுதி | 108 றப்பர் மரங்கள் .. | காசன் கம்பபாச் அன் கொம்பனி லிமிட்டட், கொழும்பு | 0 2 3 |
| 3 | ஷை .. | 64 றப்பர் மரங்கள் .. | காசன் கம்பபாச் அன் கொம்பனி லிமிட்டெட் .. | 0 0 22·9 |
| 4 | கொஸ்காகரும்புற அஸ் வெதும | 1 றப்பர் மரத்தையுடைய தெனிய .. | புசெல்ல, பறக்கடுவ வாசியான ஏ. கே. தேகிஸ்சிங்கோ, மின்னெரிபிற்றிய பறக்கடுவ வாசிகளான ஐ. பி. சிரியா, ஜி. கிரிகத்தனு, பி. எச். கிரி அசங்கா, பத்பேரிய, பறக்கடுவ வாசியான என். ஜி. முதலிஹாமி | 0 0 21·5 |
| 5 | ஷை .. | தெனிய .. .. | புசெல்ல, பறக்கடுவ வாசியான ஏ. கே. தேமிஸ்சிங்கோ, பத்பேரிய, பறக்கடுவ வாசியான என். ஜி. முதலி ஹாமி, மின்னெரிபிற்றிய, பறக்கடுவ வாசியான ஐ. பி. சிரியா, ஜி. கிரிஹத்தனு, பி. எச். கிரி அசங்கா | 0 0 16·1 |
| 6 | ஷை .. | நெல்வயல் .. .. | பறக்கடுவ வாசிகளான ஏ. கே. தேகிஸ்சிங்கோ, பி. முதலிஹாமி, ஐ. பி. சிரியா, பி. எச். நமின்கிரா, பி. எச். கிரிஹத்தனு | 0 0 21·7 |
| 7 | ஷை .. | ஷை .. .. | ஷை .. .. | 0 1 17·9 |
| 8 | ஷை .. | ஷை .. .. | பறக்கடுவ வாசியான எம். பி. சைமா .. | 0 0 1 |
| 9 | மின்னெரிபிற்றிய தோட்டம் .. | 14 தேயிலைச் செடிகள் .. | ஐ. எச். மரைக்கார், பறக்கடுவ .. .. | 0 0 5·5 |
| 10 | கலஹிற்றிய மாஹாகும்புற .. | நெல்வயல் .. .. | பறக்கடுவ, புசெல்ல வாசியான ஏ. கே. தேகிஸ்சிங்கோ | 0 0 2·1 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ந் திகதி காலை 9.30 மணிக்கு தெஹிஒவிற்ற காரியாதிகாரியின் கந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கேகாலைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 28 ந் உ.

எல். பி. குளன்கமுவ,
டிஸ்திறிக் உதவி அரசாட்சி ஏசண்டு.

இலக்கம் LH. 779.

**1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி கொள்ளும் சட்டம் 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

படம் : **P.P.A** 1,005. இடம்—சப்பரகமுவ மாகாணம், கேகாலே டிஸ்திறிக், தெஹிகம்பல் கோறளை கீழ் புளத்கம, மெகொடபொத்த பத்து, ஹல்ஒலுவ கிராமம்

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமையாளர் | விசாலம் ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | குடுமீரியவத்த அல்லது குடுமிரிசெஹேன | றப்பர், மா, பலா, கசு, பாக்கு, கித்துல், தென்னை, ஈரப்பலா, வரிச்சு ஓலைக்கூரையுடைய நிரந்தர மற்ற வீடு, கற்பாறைகளையும் அடங்கிய வளவு | மெசேர்ஸ் செட்டிநாட் கோப்பறேசன் பிறைவேட் லிமிட்டெட், 256 கடல் வீதி, கொழும்பு | 28 0 25 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ந் திகதி காலை 9.0 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில்/அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யு. ரி. ஜயசிங்ஹ,
டிஸ்திறிக் அரசாட்சி ஏசண்டு.

கேகாலைக் கச்சேரி,
1960 ம் ஆண்டு ஜூலை மீ 29 ந உ.

---

## திருத்தம்

1954 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ம் ஆண்டின் 9 ம் இலக்க காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய காணி மந்திரியினுல் 15.6.59 ம் திகதியில் பிரகடனம் செய்யப்பட்டு 1959 ம் ஆண்டு யூலாய் மாதம் 31 ம் திகதி 11,823 ம் இலக்க இலங்கை அரசாங்க " கெசற் " பத்திரிகையில் வெளியிட்ட பிரகடனத்திற்கு பின்வரும் திருத்தங்கள் :—

(1) காணி இருக்கும் இடம் பற்றிய விபரத்திற்கு " கிழக்கு " என்னும் சொல்லை " கொழும்புத்துறை " என்னும் வாக்கியத்திற்கு பின் சேர்த்து " கொழும்புத்துறை கிழக்கு கிராமத்தில் உள்ளதும் " என்று வாசிக்கவும்.

(2) மேற்கு பகுதி என விபரிக்கப்பட்ட பகுதியில் " சைவப்பிரகாச வித்தியாசாலைக்குரிய ரி. எஸ். பி. பட இல.ஏ/2/61 (கிழக்கு) 84 ம் காணித் துண்டில் ஒரு பகுதியும் உடையது " என்ற வசனத்தை நீக்கி மேற்கு " புங்கங்குளம் வீதி " என வாசிக்கவும்.

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

இல : எல். ஜே. 1937–எல்.ஈ. 2149.

**முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

புத்தளம் மாவட்டம் வடக்கு பிட்டிகல் கோறளையில் தாறகுடுவில்லு என்னும் கிராமத்திலுள்ள " சாயித்திய வர்த்தன " சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களான, திருவாளர்கள் கொற்க்கனகே தோமஸ் சில்வா, சமரவீர சந்திர சேகர, அமரசிங்ஹகே ஞேமானிஸ் சிங்கோ ஆகியவர்கள், புதிய தாறகுடுவில்லு பி.ஓ.பி, யிலுள்ள, 72 ம் இலக்கக்காணியில், 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள முடிக்குரிய நிலத்தை அதன்கண், ஒரு பௌத்த ஆலயம் நிறுவுவதன் பொருட்டு குத்தகையாகக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. தற்போது மேற் குறிப்பிடப்பட்டுள்ள கிராமத்திலிருந்து ஒன்றரை மைலுக்கப்பாலுள்ள அங்குணுவில் என்னும் கிராமத்தில் தான் ஒரு பௌத்த ஆலயம் அமைந்திருக்கிறது. நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் பௌத்த ஆலயத்தினுல் சுமார் 500 பௌத்தர்கள் பயனடைவார்கள், விண்ணப்பித்துள்ள நிலம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே ஏனைய நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைய குறித்த விண்ணப்பத்தை ஏற்று அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(அ) வாடகை : வருடம் ஒன்றிற்கு ரூபா 15 ;

(ஆ) குத்தகையாளர் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து மூன்று வருடத்திற்குள் புத்தள மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக இந்நிலத்தில் ஒரு பௌத்த ஆலயம், வேதாகமம் ஓதும் மண்டபம், பௌத்த குரு வதியும் இல்லம், இவற்றைக் கட்டி முடிப்பதுடன் ஒரு அரசமரமும் நாட்டி முடிக்க வேண்டும் ;

(இ) குத்தகையாளர் அந்நிலத்தை ஒரு பௌத்த ஆலயம் நிறுவுவதன் பொருட்டு உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது ;

(ஈ) குத்தகையாளர் கட்டிடங்களைக் கட்டிமுடித்து 6 மாத காலங்களுக்குள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட உறுதியின் மூலம் இந்நிலத்தை அர்ப்பணம் செய்தல் வேண்டும். அப்படிச் செய்யுமிடத்து அதிகாரதத்துவமுள்ள விகாராதிபதிக்கோ அல்லது ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளருக்கோ இந்நிலம் 99 வருடங்களுக்குக் குத்தகையாக வழங்கப்படும்.

3. இக்குத்தகை வழங்கக்கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைகளுக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் எனக்குக் காட்டினுலன்றிக் குத்தகை வழங்கப்படும்.

ஈ. கே. ஆர். அசரப்பா,
காணி அதிபருக்காக.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஆவணி மீ 5 ம் உ.

---

இல. எல். கே. 267.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்கள் 21 (2) ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

சீப்புக்குளத்திலுள்ள திரு. டி.பி. செனிவிரத்ன என்பவர் அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த கிழக்கு நுவரகம்பளாத்தவிலுள்ளதும் 764 ம் இலக்கம் கொண்ட இறுதிக் கிராமப்படத்திலுள்ள 49 ம் இலக்கக் காணித்துண்டிலிருந்து சுமார் 1 றூட் விஸ்தீரணங்கொண்ட முடிக்குரிய நிலத்தை அதில் ஓர் வியாபார ஸ்தாபனம் நிறுவுதற்கும் குடியிருப்பதற்கும் குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. வருடாந்த உத்தரவுப் பத்திரத்தின் பேரில் இவருக்கு இக்காணி 14.3.38 ல் குத்தகைக்கு வழங்கப்பட்டீது. இந்நிலத்தில் ரூபா 2,500 பெறுமதியுள்ள ஓர் கட்டிடமுள்ளது. தொடர்ந்து இந்நிலத்தில் இவர் குடியிருப்பது சட்டத்திற்கு மாறுனது. ஆகையால் குறித்த விண்ணப்பத்தை பின் வரும் நிபந்தனைகளோடு மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய குத்தகைக்கு வழங்க உத்தேசிக்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது :

(அ) காலம்—99 வருடம் ;

(ஆ) வாடகை வருடமொன்றுக்கு : ரூபா 2.25. முப்பது வருடத்துக்கு ஒரு முறை வாடகை திருத்தியமைக்கப்படும் ;

(இ) குத்தகைக்காரர் நிலத்தை குடியிருக்கவும் வியாபாரம் செய்யவும் பாவிக்கலாமேயொழிய வேறு எவ்வித நோக்கத்திற்கும் பாவிக்கப்படாது.

3. குத்தகை வழங்கக்கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் எனக்குக் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

ஈ. கே. ஆர். அசரப்பா,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ௵ ஆகஸ்டு ௴ 5 ந் உ.

---

இல. எல். கே. 267 ஏ.

**முடிக்குரிய காணிப்பிரமாணம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்**

சீப்புக்குளத்திலுள்ள ம. ச. நூர் மொகமது என்பவர் அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த கிழக்கு நுவரகம்பளாத்தவிலுள்ளதும் 764 இலக்கம் கொண்ட இறுதி கிராமத் திட்டப்படத்தில் உள்ள 47 ம் இலக்க காணித்துண்டிலிருந்து சுமார் 2 றூட் விஸ்தீரணங்கொண்ட முடிக்குரிய நிலத்தை அதில் ஓர் வியாபார ஸ்தாபனம் நிறுவுதற்கும் குடியிருத்தற் பொருட்டும் குத்தகையாகத் தரும்படி விண்ணப்பித்திருக்கிறார் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. வருடாந்த உத்தரவுப் பத்திரத்தின் பேரில் இவருக்கு இக்காணி 1.3.45 ல் குத்தகைக்கு வழங்கப்பட்டது. இந்நிலத்தில் ரூபா 2,500 பெறுமதியுள்ள ஓர் கட்டிடமுள்ளது. தொடர்ந்து இந்நிலத்தில் இவர் குடியிருப்பது சட்டத்திற்கு மாறானது. ஆகையால் குறித்த விண்ணப் பத்தை பின் வரும் நிபந்தனைகளோடு மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய அங்கீகரிக்க உத்தேசிக்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது :

(அ) காலம் : 99 வருடம் ;

(ஆ) வாடகை வருடமொன்றுக்கு : ரூபா 4.50. முப்பது வருடத்துக்கு ஒரு முறை வாடகை திருத்தியமைக்கப்படும் ;

(இ) குத்தகைக்காரர் நிலத்தைக் குடியிருக்கவும் வியாபாரம் செய்யவும் பாவிக்கலாமேயொழிய வேறு எவ்வித நோக்கத்திற்கும் பாவிக்கப்படாது.

3. குத்தகை வழங்கக்கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் எனக்குக் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

ஈ. கே. ஆர். அசரப்பா,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ௵ ஆகஸ்டு ௴ 5 ந் உ.

---

LS. 4597.

**முடிக்குரிய காணிப்பிரமாணங்களின் 21 (2) ம் பிரமாணத்தின் கீழ் அறிவித்தல்**

வேலன்குளம் கிராம முன்னேற்றச்சங்க நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் அவ்வூரைச் சேர்ந்தவர்களும் ஆகிய திருவாளர்கள் குமாரன் ஐயம்பிள்ளை, கதிரவேலு கந்தையா, சிதம்பரம்பிள்ளை முத்தையா என்பவர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த குறிசுட்டகுளம் சந்தியில் உள்ள முடிக்குரிய காணியில் இருந்து ஏறக்குறைய ¼ ஏக்கர் நிலத்தை, அதில் ஒரு மடம் நிறுவுவதின் பொருட்டு குத்தகையாகத் தரும்படி விண்ணப் பித்துள்ளனரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : குறிசுட்டகுளம் மரஇலுப்ப கிராமச்சங்க றோட்டு ;

தெற்கு : அரசாங்கத்திற்குரிய நிலம் ;

கிழக்கு : புளியங்குளம் தண்ணியூற்று பி. டபிள்யூ. றோட்டு ;

மேற்கு : முடிக்குரிய நிலம்.

2. இந்த நோக்கத்திற்கு வேண்டிய நிலம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. குறித்த விண்ணப்பத்தை மற்றும் நிபந்தனைகளோடு பின்வருவனவற்றிற்கும் அமைய வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக் கிறது.

(அ) காலம் : 5 வருடம் ;

(ஆ) வாடகை : வருடம் ரூபா 1 ;

(இ) குத்தகையைப் பெறுபவர்கள் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து 2 வருட காலத்திற்குள் வவுனியா அரசாங்க அதிபர் திருப்திப்படும்படியாக அந்நிலத்தில் ஒரு மடம் நிறுவுதல் வேண்டும் ;

(ஈ) குத்தகை எடுப்பவர்கள் அந்நிலத்தை ஒரு மடம் ஸ்தாபிக்க உபயோகிக்கலாமேயன்றி வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது.

3. குத்தகை வழங்கக்கூடாதென இத்திகதியிலிருந்து ஆறு கிழமைக்குள் செல்லுபடியான காரணங்கள் எழுத்து மூலம் காட்டினாலன்றி இது வழங்கப்படும்.

வி. இராமனாதன்,
காணி அதிகாரிக்காக.

கொழும்பு,
1960 ம் ௵ ஆகஸ்டு ௴ 5 ந் உ.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ற் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரசல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3·30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3·30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முற்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | |
| | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | |
| | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் **வேண்டும். கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.**

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது